முழுப்பதிப்புரிமையுடையது

aat SRI LANKA

**இலங்கைக்கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

**ஆரம்பப் பரீட்சை - 2011 யூலை**

**(52) பொருளியல்**
(Economics)

16.07.2011
பிற்பகல்
2.00 – 4.00

**நேரம்: 02 மணித்தியாலம்**

பக்கங்களின் எண்ணிக்கை: 06
வினாக்களின் எண்ணிக்கை : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்**

*(1)* *இவ்வினாத்தாள் **A,B** என்னும் இரண்டு (02) பகுதிகளைக் கொண்டுள்ளது*

*(2)* ***கீழே காட்டியவாறு ஐந்து (05)** வினாக்களுக்கு விடை அளித்தல் வேண்டும்:*

- ***பகுதி A யிலுள்ள வினா இலக்கம் 01 க்கும்***
- ***பகுதி B யிலிருந்து ஏதேனும் நான்கு(04) வினாக்களுக்கும்***

*(3)* ***விடைகள்** யாவும் உமக்கு வழங்கப்பட்டுள்ள **விடைப்புத்தகத்தில்** நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த **அதே ஒரு மொழியிலேயே** எழுதப்படவேண்டும்.*

*(4)* *வரைபுதாள் வழங்கப்படும்.*

*(5)* *மொத்தம் 100 புள்ளிகள்,*

---

## பகுதி - A

இந்தப் பகுதியின் **எல்லா** வினாக்களுக்கும் விடை அளித்தல் வேண்டும்,
40 புள்ளிகள்

**01.** கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் மிகவும் சரியான விடையைத் தரப்பட்டுள்ள(1), (2), (3), (4) என்னும் பதில்களிலிருந்து தெரிவு செய்து உமது **விடைப்புத்தகத்தில்** வினாக்களைக் குறிக்கும் ஆங்கில எழுத்துகளை எழுதி அவற்றிற்கு எதிரே தெரிவுசெய்த விடையின் இலக்கத்தை எழுதுக.

(A) பொருளாதாரப்பண்டத்தின் இயல்பொன்றைத் தருகின்ற கூற்றினைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிவுசெய்க.

(1) அது ஒரு முடிவில்லா நெகிழ்ச்சியினைக் கொண்ட வழங்கலைக் கொண்டிருக்கிறது.
(2) நுகர்வோருக்கு பூச்சிய திருப்தியை அது விளைவிக்கின்றது.
(3) அது அரசாங்கத்தினால் நுகர்வோருக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.
(4) அமையச் செலவு ஒன்றினைக் கொண்டுள்ளது.

(B) குறைந்துசெல்லும் அமையச்செலவினைக் காட்டுகின்ற உற்பத்திசாத்தியவளையியின் (PPC) சரியான பண்புக்கூறு (feature) பின்வருவனவற்றுள் எது ?

(1) உற்பத்தி சாத்திய வளையி உற்பத்திப் புள்ளிக்கு உட்குவியும்(Concave).
(2) உற்பத்தி சாத்திய வளையி நேர்க்கோடாக இருக்கும்.
(3) உற்பத்தி சாத்திய வளையி உற்பத்திப் புள்ளிக்கு வெளிக்குவியும். (Convex)
(4) உற்பத்தி சாத்திய வளையி வெளியீட்டின் வேறுபட்ட மட்டங்களில் வேறுபட்ட வடிவங்களை எடுக்கிறது.

(C) சந்தைப் பொருளாதாரமொன்றில் விலைக்கோட்பாட்டின் தொழிற்பாடுகள் தொடர்பாக **பிழையான** கூற்றினை பின்வருவனவற்றிலிருந்து தெரிக.

(1) நுகர்வோர்களுக்கான சமிக்ஞைகள் (Signals)
(2) தேவைகளுக்கேற்ப வருமானத்தின் ஒரு பங்கீடு.
(3) உற்பத்தியாளருக்கு ஊக்குவிப்புகள்
(4) அருமைத்தன்மையான வளங்கள் ஒதுக்கீட்டிற்கான ஒரு வழி.

(D) பின்வருவனவற்றுள் உய்த்தறி கேள்விகளுக்கான (derived demand) உதாரணம் அல்லாதது எது?

(1) உழைப்பு (கூலி) (2) நிலம் அல்லது மூலதனம்
(3) முயற்சியாண்மை (Entrepreneurship) (4) ஆபரணம் (Jewellery)

(E) Y பண்டத்தின் விலைமாற்றம் தொடர்பாக X பண்டத்திற்கான கேள்வியின் குறுக்குநெகிழ்ச்சி (Cross elasticity of demand) பூச்சியம் எனில், X மற்றும் Y உருப்படிகள் பின்வருவனவற்றுள் எவையாக விபரிக்கப்படமுடியும்?

(1) இணைப்புப்பண்டங்கள் (Complementary goods) (2) சுதந்திரப் பண்டங்கள் (Independent goods)
(3) பதிலீட்டுப் பண்டங்கள் (Substitute goods) (4) பொதுப்பண்டங்கள் (Public goods)

(F) உற்பத்திப் பண்டமொன்றின் மேலதிக அலகொன்றை நுகர்ந்தபின்னர் நபரொருவரினால் பெறப்படும் திருப்தி எவ்வாறு அழைக்கப்படும்?

(1) அமையச் செலவு (2) எல்லைக்கிரயம் (Marginal cost)
(3) எல்லைப் பயன் (Marginal utility) (4) மொத்தப்பயன் (Total utility)

(G)




மேலேயுள்ள வரைபில் காட்டியபடி, தரப்பட்டதொரு வருமானத்தில் உபேட்சை வளையியை $ID_2$ இலிருந்து $ID_1$ இற்கு நகர்த்தக்கூடியது பின்வருவனவற்றுள் எது?

(1) பண்டங்கள் x, y.இரண்டினது விலைகளிலும் ஒரு குறைப்பு (reduction)
(2) பண்டம் x இன் விலையில் மட்டும் ஒரு குறைப்பு.
(3) x பண்டத்தின் விலையில் மட்டும் ஒரு அதிகரிப்பு.
(4) நுகர்வோனின் மெய்வருமான மட்டத்தில் ஒரு அதிகரிப்பு.

(H) கேள்விக்கோட்டை இடமிருந்து வலமாக நகர்த்துதல் தொடர்பாக **உண்மையல்லாத** கூற்றினை பின்வருவனவற்றுள்ளிருந்து தெரிவு செய்க.

(1) நாகரீக மாற்றமொன்று.
(2) பண்டத்தின் விலையில் வீழ்ச்சி.
(3) பண்டத்தின் விலையில் ஒரு எதிர்பார்க்கப்பட்ட உயர்ச்சி.
(4) இணைப்புப் பண்டங்களின் விலையில் ஒரு வீழ்ச்சி,

(I) பின்வரும் வரைபடம், நுகர்வுப்பண்டம் **X** இற்கான கேள்வி நிரம்பல் கோடுகளை **OP** சமநிலைவிலை மற்றும் **OQ** சமனிலைக் கணியம் ஆகியவற்றுடன் காட்டுகிறது.




மேலேயுள்ள வரைபின்படி நிழற்படுத்தப்பட்ட பரப்பு (PAE) காட்டுவது

(1) நிறுவனத்தின் மிகைசாதாரண இலாபங்கள் (Supernormal Profits)
(2) சிக்கன வாடகை (Economic rent.)
(3) கைமாற்று வருவாய்கள் (Transfer earnings.)
(4) நுகர்வோன் மிகை (Consumer surplus.)

(J) பின்வருவனவற்றுள் வீட்டுத்துறையின் (household sector) ஒரு பணியாவது, எது?

(1) பண்டங்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி செய்தலும் வழங்கலும்.
(2) பண்டங்கள் வழங்கல் மற்றும் நலன்புரி வசதிகள்.
(3) உற்பத்திக் காரணிகளை வழங்குவதன் மூலம் வருமானத்தினை உழைத்தல்.
(4) வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டிருத்தல்

(K) கீழேயுள்ள அட்டவணை ஒரு நாட்டின் ஆண்டொன்றிற்கான தேசியவருமான விபரங்களைக் காட்டுகிறது.

| | | ருபா (மில்லியனில்) |
|---|---|---|
| 1. | காரணிக்கிரய விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) | 50,000 |
| 2. | மூலதனச் செலவு | 5,000 |
| 3. | நேரில் வரிகள் (Indirect taxes) | 9,000 |
| 4. | ஏற்றுமதிகள் (Exports) | 5,000 |
| 5. | மானியங்கள் (Subsidies) | 1,000 |
| 6. | இறக்குமதிகள் (Imports) | 6,000 |

பின்வருவனற்றிலிருந்து சந்தைவிலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பெறுமதியைத் தெரிவுசெய்க.

(1) ரு.60,000/- மில்லியன் (2) ரு.61,000/- மில்லியன்.
(3) ரு.58,000/- மில்லியன். (4) ரு.57,000/- மில்லியன்.

(L) அரசாங்கப் பாதீட்டின் மாற்றுக்கொடுப்பனவு ஒன்றை (a transfer payment of the Government budget) பின்வருவனவற்றுள்ளிருந்து தெரிக?

(1) அரசாங்க ஊழியர்களின் சம்பளங்கள்
(2) பொதுக்கடனுக்கான வட்டிக் கொடுப்பனவு
(3) இலவச பாடப்புத்தகங்களின் வழங்கல்
(4) புதிய வீதியொன்றின் நிர்மாணத்துக்கான கொடுப்பனவு

(M) 2010 ஆண்டிற்கான இலங்கை மத்திய வங்கியின் ஆண்டறிக்கைக்கிணங்க 2010 இல் நாட்டின் பொருளாதார வளர்ச்சி:

(1) 6% (2) 8% (3) 4.8% (4) 7.5%

(N) பணத்தின் மிகச்சரியான வரைவிலக்கணத்தைப் பின்வருவனவற்றுள்ளிருந்து தெரிவுசெய்க:

(1) அது ஒரு பரிமாற்று ஊடகம் (medium of exchange).
(2) அது ஒரு பெறுமதிக்களஞ்சியம் (store of value).
(3) பொருளாதாரமொன்றில் பல்வேறுவகையான பண்டங்கள் மற்றும் சேவைகளுக்காக ஒரு ஊடகமாகக் பயன்படுத்துவதற்காக ஏற்றுக்கொளளப்பட்ட எதுவும்.
(4) அது கணக்கின் ஒரு அலகு.

(O) வங்கிப் பணமாகக் கருதப்படக்கூடியது, பின்வருவனவற்றுள் எது?

(1) நாணயங்களும் தாள்களும் (Coins and notes).
(2) முகப்பெறுமதிக்கு (face value) சமமான உள்ளீட்டுப் பெறுமதியை (Intrinsic value) கொண்டுள்ள பணம்
(3) வங்கிகளிலுள்ள வைப்புகள்.
(4) வர்த்தக வங்கிகளில் உள்ள பொதுமக்களின் கேள்விவைப்புகள்(demand deposits of the public).

(P) ‘பணவீக்கம்’ என்பதனால் கருதப்படுவது யாது ?

(1) பொது விலை மட்டத்தின் (General Price Level) தொடர்ச்சியாக வீழ்ச்சியடைகிற போக்கு.
(2) பொது விலைமட்டத்தின் தொடர்ச்சியாக உயர்ச்சியடையும் போக்கு.
(3) பணத்தின் பெறுமதியின் தொடர்ச்சியாக உயர்வடையும் போக்கு.
(4) வேலையின்மையின் தொடர்ச்சியாக உயர்வடையும் போக்கு.

(Q) புதிய ஒரு வீதியை நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் அதன் பாதீட்டிலிருந்து ருபா 50 மிலியனை ஒதுக்கீடு செய்தால் அச்செலவினம் எவ்வாறு கருதப்படலாம்,

(1) வீதிப்பாவனைகளுக்கான ஒரு மானியம்.
(2) அரசாங்கத்தின் ஒரு மீள் நிகழ்வு செலவினம் (recurrent expenditure).
(3) அரசாங்கத்தின் ஒரு மூலதனச் செலவினம்.
(4) அரசாங்கத்தின் ஒரு மாற்றுக் கொடுப்பனவு.

(R) ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படுவது பின்வருவனவற்றுள் எது?

(1) நுகர்வோர் பாதுகாப்பு (Consumer Protection).
(2) வறுமையைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.
(3) குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் ஒரு நாட்டின் மொத்த உற்பத்தியில் ஒரு அதிகரிப்பு.
(4) பொருளாதார வளர்ச்சியைப் பேணுகின்ற அதேவேளை பொருளாதார சமமின்மைகளின் குறைப்பு.

(S) வரி ஒத்திசைவுச் செயற்பாடு (Tax compliance) என்பது பற்றி வரைவிலக்கணப்படுத்தக்கூடியது,

(1) உயர்வருமானக் குழுக்களுக்கான வரிவீதத்தை உயர்த்துதல்.

(2) குறிப்பிட்ட கைத்தொழில்கள் மற்றும் வியாபாரங்களை வரியிலிருந்து முற்றாக விலக்களிப்புச் செய்தல்.

(3) கொடுப்பனவை மேற்கொள்ளல் மற்றும் அறிக்கையிடல் (reporting) தொடர்பாக வரிச்சட்டங்களுக்கு சுயமாகவே ஒத்திசைத்தல்

(4) அது வழமையாக விதிக்கப்பட்ட வரிப்பெறுமதியின் ஒரு சதவீதமாக வெளிப்படுத்தப்படுகிறது.

(T) பாதீட்டுப் பற்றாக்குறையொன்றை நிதியீட்டலின் விரிவாக்க மூலத்தை (expansionary source) பின்வருவனவற்றுள்ளிருந்து தெரிவு செய்க.

(1) தனிப்பட்ட சேமிப்புகளைப் பயன்படுத்துதல்

(2) பொதுமக்களுக்கு திறைசேரி உண்டியல்களை விற்றல்.

(3) ஊழியர் சேமலாப நிதியத்திலிருந்து (EPF) கடன் வாங்குதல்.

(4) வர்த்தக வங்கிகளிடமிருந்து கடன் வாங்குதல்.

(ஒவ்வொன்றும் 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 40 புள்ளிகள்)

## பகுதி - B

இப்பகுதியிலருந்து ஏதேனும் (04) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக

60 புள்ளிகள்

**02.** (a) (i) அருமை (scarcity) என்பதனாற் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) அருமை மற்றும் தெரிவு(choice) ஆகியவற்றுக்கிடையேயுள்ள வித்தியாசங்களை விளக்குக. (03 புள்ளிகள்)

(b) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளிகள்)

(c) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை சந்தைப்பொருளாதாரம் எவ்வாறு தீர்க்கிறது? (04 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**03.** (a) நிறைபோட்டியின் பிரதான பண்புகள் ஐந்தினைப் (05) பட்டியலிடுக. (05 புள்ளிகள்)

(b) நிறைபோட்டியின் கீழ் நிறுவனமொன்றில் நீண்டகால சமநிலையினை (long run equilibrium) சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

(c) (i) சிலருரிமை (oligopoly) என்பதனாற் கருதப்படுவது யாது? (01 புள்ளிகள்)

(ii) சிலருரிமையின் (oligopoly) பிரதான பண்புகளைப் பட்டியலிடுக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

**04.** (a) குறைந்துசெல்லும் எல்லைப்பயன் (Diminishing Marginal Utility) என்றால் என்ன என்பதை விளக்குக. அதற்கு உதாரணம் ஒன்று தருக. (05 புள்ளிகள்)

(b) எல்லைப்பயன் கோட்பாட்டின் பிரதிகூலங்கள் யாவை? (05 புள்ளிகள்)

(c) கேள்வியின் தீர்மானக் காரணிகளை (determinants of demand) குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(மொத்தம்15 புள்ளிகள்)

**05.** (a) கீழ்வரும் வரைபடம் மூடிய பொருளாதாரமொன்றில் தேசிய வருமானத்தின் வட்டப்பாய்ச்சலொன்றைக் காட்டுகின்றது




| | |
|---|---|
| (i) | நிறுவனங்கள் (Firms) |
| (ii) | இல்லத்தார் (Households) |
| (iii) | உற்பத்திக்காரணிகள் |
| (iv) | பண்டங்கள் |
| (v) | கொள்வனவுகள் மீதான செலவினம் |
| (vi) | காரணி வருமானங்கள் |

பெட்டியில் வழங்கப்பட்டுள்ள பட்டியலிலுள்ள பதங்களைப் பயன்படுத்தி வரைபடத்தில் ஆங்கில எழுத்துக்களால் குறிப்பிடப்படுபவைகளைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(b) தேசியவருமானத்தை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகிற மூன்று(03)அணுகுமுறைகளை (approaches) சுருக்கமாக விபரிக்குக. (06 புள்ளிகள்)

(c) கீழே உள்ள தரவுகள் ஒரு நாட்டின் தேசியவருமானக் கணக்குகளிலிருந்து எடுக்கப்பட்டவையாகும்:

| | | ரூபா. (மிலியனில்) |
|---|---|---|
| 1. | நுகர்வோர் செலவினம் | 29,000 |
| 2. | அரச நுகர்வு | 8,000 |
| 3. | மொத்த உள்நாட்டு நிலையான மூலதன உருவாக்கம் | 8,000 |
| 4. | மானியங்கள் | 1,000 |
| 5. | வெளிநாட்டிலிருந்து நிகர வருமானம் | 1,000 |
| 6. | நேரில்வரிகள் | 8,000 |
| 7. | இறக்குமதிகள் | 5,000 |
| 8. | ஏற்றுமதிகள் | 4,000 |
| 9. | மூலதன நுகர்வு | 4,000 |

காரணிக்கிரய விலைகளில் (at factor Cost Prices) மொத்ததேசிய உற்பத்தியைக் (GNP) கணிக்குக.
(06 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

**06.** (a) பரந்த பணநிரம்பல் (Broad Money Supply) என்றால் என்ன என்பதை விளக்குக. (04 புள்ளிகள்)

(b) (i) "பணத்தின் பெறுமதி" (Value of Money) என்பதனாற் கருதப்படுவது யாது? (02 புள்ளிகள்)

(ii) பொது விலைமட்டம் (General Price Level)பணத்தின்பெறுமதி (Value of Money) ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்பைச் சுருக்கமாக விபரிக்குக. (04 புள்ளிகள்)

(c) பணவீக்கத்தின் தாக்கங்கள் எவை? (05 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

**07.** (a) பொருளாதார வளர்ச்சி (Economic Growth) பொருளாதார அபிவிருத்தி (Economic Development). ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டினை விளக்குக. (05 புள்ளிகள்)

(b) ஒரு நாடு பொருளாதார வளர்ச்சியை எய்துவதற்கு நடைமுறைப்படுத்தக்கூடிய நடவடிக்கைகள் (measures) ஐந்தினை (05)க் குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(c) இலங்கையில் மரக்கறிகளின் விலைத்தளம்பலுக்கான(fluctuation) காரணங்கள் ஐந்தினைக்(05) குறிப்பிடுக.
(05 புள்ளிகள்)
(மொத்தம் 15 புள்ளிகள்)

- o0o -